# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணாசாலை, கிண்டி, சென்னை– 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல்முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை: மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 50/மா/2023**

**நாள்: 06.04.2023**

திரு. T.செல்வம், காட்பாடி,
வேலூர். – முறையீட்டு மனுதாரர்

ஆணையர், வேலூர் மாநகராட்சி,
வேலூர். – எதிர்மனுதாரர்

வேலூர், காட்பாடி, வள்ளிமலை ரோடு, V.K.T. நகர், கதவு எண்.25 என்ற முகவரியில் வசிக்கும் திரு. T.செல்வம் என்பவரின் 30.11.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 05.12.2022–ல் பெறப்பட்டு 50/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

வேலூர், காட்பாடி, வள்ளிமலை ரோடு, V.K.T. நகர், கதவு எண்.25 என்ற முகவரியில் வசிக்கும் திரு. T.செல்வம் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 30.11.2022 நாளிட்ட தனது மனுவில்:

" நான் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் மாநகராட்சியில் ஒப்பந்ததாரராக பதிவு செய்ய கடந்த 8 மாதங்களுக்கு முன்பாக விண்ணப்பித்தேன். ஆனால் கடந்த 8 மாதங்களாக பதிவு செய்யாமல் அலைக்கழிக்கின்றனர். எனது விண்ணப்பத்தினை (Engineering Section) பொறியாளர் அலுவலகத்தில் சமர்ப்பித்தேன். இது தொடர்பாக விளக்கம் கேட்டு சென்றபோது நான் அளித்த விண்ணப்பம் காணவில்லை என்று சொன்னார்கள். பிறகு மறுபடியும் விண்ணப்பத்தினை சமர்ப்பித்தேன். இது தொடர்பாக M.E. அவர்களை சந்தித்து விளக்கம் கேட்டேன். அவர் மேயரை சந்தித்து விட்டு வர சொன்னார். ஆனால் என்னால் பலமுறை மாநகராட்சி அலுவலகம் சென்றும் மேயரையும் என்னால் தொடர்பு கொள்ள இயலவில்லை. M.E. அவர்களையும் தொடர்பு கொள்ள இயலவில்லை.

இதுநாள் வரை என்னுடைய விண்ணப்பத்தினை பதிவு செய்யவில்லை. அவர்கள் கேட்ட அனைத்து ஆவணங்களையும் சமர்ப்பித்தும் பதிவு செய்யாமல் இருக்கின்றனர். நான் ஒரு பட்டியல் இனத்தை சேர்ந்த முதல் தலைமுறை தொழில் முனைவோராக உள்ளேன். பட்டியலினத்தை சார்ந்தவர்களுக்கு மத்திய மாநில அரசுகளின் ஒப்பந்த பணிகளில் 4 மற்றும் 5

சதவீதம் இட ஒதுக்கீடு உள்ளன. ஆனால் இந்த அரசு நிர்வாகம் எங்களை ஒப்பந்ததாரராகவே பதிவு செய்யாமல் இருப்பது எங்கள் சமூகத்தையே முன்னேற செய்யாமல் தடுக்கும் செயலாகும். இதனால் நான் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளேன். பட்டியலினத்தை சார்ந்தவரை பட்டியலினம் அல்லாத அதிகாரிகள் புறக்கணிப்பது வன்கொடுமை தடுப்புச்சட்டம் 2015ன் கீழ் குற்றமாகும். எனவே அதிகார துஷ்பிரயோகம் செய்யும் வேலூர் மாநகராட்சி அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) இம்மனு தொடர்பாக இம்முறைமன்ற நடுவ 07.12.2022 நாளிட்ட கடிதம் மூலம் வேலூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை கோரப்பட்டது.

3) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 27.03.2023 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகும்படி 07.03.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4) மனுதாரர் 27.03.2023 அன்றைய நேரடி விசாரணையில் இம்முறைமன்றத்தில் ஆஜராகி பின்வருமாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

" வேலூர் மாநகராட்சியில் ஒப்பந்ததாரராக பதிவு செய்ய வேண்டி கடந்த 8 மாதங்களுக்கு முன்பு வேலூர் மாநகராட்சி பொறியாளர் பிரிவில் விண்ணப்பம் அளித்திருந்தேன். எனது விண்ணப்பத்தின் மீது எந்தவித நடவடிக்கையும் மாநகராட்சி அலுவலர்களால் எடுக்காததால், இது தொடர்பாக மாநகராட்சி அலுவலகத்தில் விசாரித்தபோது, உள்ளாட்சி அமைப்புப்பிரதிநிதிகளை பார்க்கும்படி தெரிவித்தனர். எனக்கு பின்னால் பதிவு செய்திட வேண்டி விண்ணப்பம் அளித்தவர்களை பரிசீலித்து ஒப்பந்ததாரராக பதிவு செய்துள்ள மாநகராட்சி அலுவலர்கள் எனது விண்ணப்பத்தினை பரிசீலிக்கவில்லை. இது தொடர்பாக தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் விவரங்களை கோரி பெற்றபோது ஒப்பந்ததாரர் பதிவு செய்த பெயர் பட்டியலில் எனது பெயர் இடம் பெறவில்லை. எனது விண்ணப்பத்தை பரிசீலித்து ஒப்பந்ததாரராக பதிவு செய்ய வேண்டுமானால் கையூட்டு தரவேண்டும் என உதவி செயற்பொறியாளர் திரு G. ரவிச்சந்திரன் என்பவர் என்னை வலியுறுத்தினார். 30.11.2022 நாளிட்ட மனுவை இம்முறைமன்றத்தில் அளித்த பின்னரே என்னை ஒப்பந்ததாரராக வேலூர் மாநகராட்சி அலுவலர்கள் பதிவு செய்துள்ளனர். எனவே எனது பெயரை முறையாக ஒப்பந்ததாரராக குறித்த காலத்தில் பதிவு செய்யத்தவறிய அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

5) வேலூர் மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் 27.03.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார் :

"வேலூர் மாநகராட்சியைச் சேர்ந்த திரு.செல்வம் என்பவர் தனது பெயரை ஒப்பந்ததாரராகப் பதிவு செய்திட வேண்டி 18.04.2022 விண்ணப்பம் அளித்திருந்தார். மேற்கண்ட விண்ணப்பம் பரிசீலனை செய்யப்படடு 25.11.2022 அன்று மாநகராட்சியின் வகுப்பு III ஒப்பந்ததாரராக பதிவு செய்து உத்தரவு வழங்கப்பட்டது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக் கொண்டு மனுதாரருக்கு ஒப்பந்ததாரராக பதிவு செய்து வழங்கப்பட்ட ஆணையின் நகலினை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) வேலூர் மாநகராட்சி ஆணையர் தனது 24.03.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"மனுதாரர் (BEEMJI) நிறுவனம் இம்மாநகராட்சியில் ஒப்பந்ததாரராக பதிவு செய்திட கோரி 18.04.2022 அன்று விண்ணப்பம் அளித்துள்ளார். மேற்படி விண்ணப்பம் பரிசீலனை செய்யப்பட்டு 25.11.2022 அன்று இம்மாநகராட்சியில் வகுப்பு III ஒப்பந்ததாரராக பதிவு செய்யப்பட்டு உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி உத்திரவு வழங்கப்பட்டதை அடுத்து ஒப்பந்ததாரர் பதிவு கட்டணமாக ரூ.2000/–ம் 19.12.2022ம் தேதி வேலூர் மாநகராட்சி கருவூலத்தில் மேற்கண்ட நிறுவனத்தால் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட நிறுவனம் உத்திரவு நகலினை பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதன் நகல் இத்துடன் இணைத்து தங்களுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம் மற்றும் வேலூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வேலூர் மாநகராட்சி உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் அறியமுடிகிறது.

மனுதாரர் தான் வேலூர் மாநகராட்சியில் ஒப்பந்ததாரராக பதிவு செய்ய வேண்டி மாநகராட்சி பொறியாளர் பிரிவில் விண்ணப்பம் அளித்திருந்தேன் எனவும் அது 30.11.2022 நாளிட்ட மனுவினை இம்முறை மன்றத்தில் அளித்த பின்னரே தன்னை ஒப்பந்ததாரராக பதிவு செய்துள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் 18.04.2022ல் விண்ணப்பம் அளித்திருந்தார். விண்ணப்பம் பரிசீலனை செய்யப்பட்டு 25.11.2022 அன்று மாநகராட்சியின் வகுப்பு III ஒப்பந்ததாரராக பதிவு செய்து உத்தரவு வழங்கப்பட்டது என்பதை வேலூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

2014 ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச்சட்டம் (ம) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:–

பிரிவு " 7 " The Ombudsman shall perform all or any of the following functions, namely:-

7 (c) where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules அடிப்படையிலும்,

இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

மனுதாரர் திரு T.செல்வம் தனது பெயரை வேலூர் மாநகராட்சியில் ஒப்பந்ததாரராக பதிவு செய்திட வேண்டி 18.04.2022ல் விண்ணப்பம் அளித்துள்ளார். மனுதாரர் இப்பொருள் தொடர்பாக விளக்கம் கேட்க சென்றபொழுதுதான் அவரது விண்ணப்பம் காணவில்லை என மாநகராட்சி அலுவலர்கள் தெரிவித்ததால் மீண்டும் ஒரு விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார். மாநகராட்சி M.E. அவர்களிடம் விளக்கம் கேட்க மனுதாரர் சென்ற பொழுது அவரை மேயரை சென்று சந்தித்துவிட்டு வர சொல்லியுள்ளார். மனுதாரரால் மேயரை பார்க்க இயலவில்லை. மீளவும் M.E. அவர்களையும் தொடர்பு கொள்ள இயலவில்லை. பட்டியலினத்தை சார்ந்த தன்னை

ஒப்பந்ததாரராகவே பதிவு செய்யாமல் இருப்பது தனது சமூக முன்னேற்றத்தை தடுக்கும் செயலாக மனுதாரர் கருதி மிகுந்த மன உளைச்சலுக்கும் ஆளாக்கப்பட்டுள்ளது மிகவும் வருத்தத்திற்குரியது. பின்னர் அவரது விண்ணப்பம் பரிசீலனை செய்யப்பட்டு **25.11.2022** அன்று வேலூர் மாநகராட்சியில் வகுப்பு III ஒப்பந்ததாரராக பதிவு செய்யப்பட்டு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதையடுத்து மனுதாரரும் ஒப்பந்ததாரர் பதிவு கட்டணம் ரூ.**2000/–**ம் **19.12.2022** வேலூர் மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தியுள்ளார். ஏறத்தாழ **8** மாதம் கழித்தே இந்த உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. காலதாமதத்திற்கு குறிப்பான காரணங்கள் ஏதும் ஆணையரின் அறிக்கையிலோ அல்லது உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலத்திலோ இல்லை. மனுதாரரிடம் வெவ்வேறு காரணங்களை கூறி அலைக்கழித்துள்ளனர். மேலும் மனுதாரர் தனது வாக்குமூலத்தில் அவரது விண்ணப்பத்தை பரிசீலித்து ஒப்பந்ததாரராக பதிவு செய்ய வேண்டுமானால் கையூட்டு தர வேண்டும் என உதவி செயற்பொறியாளர் திரு.ரவிச்சந்திரன் தன்னை வலியுறுத்தினார் என்று தனது வாக்குமூலத்தினை பதிவு செய்துள்ளார். சமர்ப்பிக்கப்பட்ட உரிய ஆவணங்களை ஆய்வு செய்து அதன் அடிப்படையில் மேல் நடவடிக்கையை தொடராமல் வழிகாட்டுதலையும், விதிமுறைகளையும் பின்பற்றாமல் தன்னிச்சையாக செயல்பட்டு மேற்சொன்ன முறைகேட்டிற்கு காரணமாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள சம்மந்தப்பட்ட அலுவலர் மீது மட்டும் அல்லாமல் காலதாமதமாக அனுமதி வழங்க காரணமாக இருந்துள்ள சம்மந்தப்பட்ட அனைத்து அலுவலர்கள் மீதும் உரிய விதிகளின் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

இனி வருங்காலங்களில் இதுபோன்ற தவறுகள் நடைபெறாமல் இருக்க ஒட்டு மொத்த நிர்வாகத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அனுகுமுறை மற்றும் ஒருங்கிணைந்த செயல்பாடு தொடர்பான வழிகாட்டுதல்கள் ஆகியவற்றை வகுத்து அனைத்து மாநகராட்சி ஆணையர்கள் மற்றும் ஏனைய அலுவலர்களும் அவற்றை முறையாக கடைப்பிடிக்க தக்க அறிவுரைகள் வழங்கிடவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

The belated registration of the petitioner contractor after a lapse of 8 months and more for ulterior motives, obvious abuse of power and autocracy of the Assistant Executive Engineer of Katpadi division of the Vellore Corporation deserves severe condemnation and strictures by this Forum. The M.E. of the Corporation has kept himself aloof without verifying the reasons for the delay in registration of the petitioner as a contractor. This is not without ulterior motives, prejudices and misuse of his position. It is a sad commentary on the state of affairs prevailing in the Engineering section of the Vellore Corporation. The DMA is directed to pull up the Vellore Corporation and ensure that the disciplinary proceedings against the M.E. and Assistant Executive Engineer Thiru. Ravichandran are taken to the logical end without dilution of the process. This kind of misconduct brings negative perception of the Local Administration in the Urban Local Bodies when our state is in the forefront of Local Administration reforms, social welfare and holistic endeavours to capture "numero uno" status at the national level. Detailed circular instructions may be sent to all Corporations and Municipalities to guard against such recurrence of misbehaviour, delay and wanton denial in the Engineering divisions of the respective

offices in the matter of enrolment of contractors with reference to rules and regulations in vogue.

**2023**-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் **06** -ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

**1)**திரு. T.செல்வம்,
**25,** V.K.T. நகர், வள்ளிமலை ரோடு,
காட்பாடி, வேலூர் **– 632 007.**

**2)**ஆணையர்,
வேலூர் மாநகராட்சி, வேலூர்.

**3)**நகராட்சிநிர்வாகஇயக்குநர்,
நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
எண்.**75,** சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜாஅண்ணாமலைபுரம், சென்னை– **600 028.**

**4)**இணைஇயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
எண்.**75,** சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜாஅண்ணாமலைபுரம், சென்னை– **600 028.**

நகல்.

மாண்புமிகுமுறைமன்றநடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக